பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
20 06 2024 6 45
வியாழக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள் -

1. நெல் உள்ளிட்ட 14 பயிர்களுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலையை உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
2. தமிழகம் மற்றும் குஜராத் கடலோரப் பகுதிகளில் காற்றாலைத் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது ஒரு முக்கிய நடவடிக்கை என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
3. தமிழக சட்டப் பேரவைக் கூட்டத் தொடர் இன்று தொடங்குகிறது.
4. கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 22-ஆக அதிகரித்துள்ளது.
   இச்சம்பவம் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் பயிணிடமாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.
5. தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றுத் தொடரைக் கைப்பற்றியது.

*--- இனி விரிவான செய்திகள் ----*

**[]<<<>>>[]**

நடப்பு கரீப் பருவத்தில் 14 பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை அதிகரிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், நெல், பருத்தி, சிறுதானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்டவற்றின் குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

சாதாரண ரக நெல்லுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு 117 ரூபாய் அதிகரிக்கப்பட்டு இரண்டாயிரத்து 300 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இதனால் விவசாயிகள் பெரிதும் பயனடைவார்கள் என்று அவர் கூறினார்.

நாட்டிலேயே முதல் முறையாக தமிழகம் மற்றும் குஜராத்தில் கடலோரப் பகுதியில் காற்றாலை மின்சக்தித் திட்டங்களை செயல்படுத்தவும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

தலா 500 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு திட்டங்கள் ஏழாயிரத்து 453 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்று திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தமிழகம் மற்றும் குஜராத் கடலோரப் பகுதிகளில் மொத்தம் ஒரு ஜிகாவாட் காற்றாலை மின் திட்டங்களுக்கு நிதி ஒதுக்க மத்திய அமைச்சரவை முடிவு செய்திருப்பது முக்கியமான நடவடிக்கை என பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இத்திட்டம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை மேம்படுத்துவதோடு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் பங்களிக்கும் என்று தெரிவித்துள்ளார்.,

இதன் காரணமாக கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

[]<<<>>>[]

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கள்ளச்சாராயம் அருந்தி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 22-ஆக அதிகரித்துள்ளது.

பாதிக்கப்பட்ட 70-க்கும் மேற்பட்டோர் புதுச்சேரி, கள்ளக்குறிச்சி, சேலம், விழுப்புரம் ஆகிய இடங்களில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடைய இந்த சம்பவம் தொடர்பாக சி பி சி ஐ டி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் திரு ஷர்வன்குமார் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், புதிய ஆட்சியராக திரு எம் எஸ் பிரசாந்த் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மாநில அரசு கூறியுள்ளது.

மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு சமய்சிங் மீனா தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

புதிய கண்காணிப்பாளர் திரு ரஜத் சதுர்வேதி நியமிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கள்ளக்குறிச்சி சம்பம் அதிர்ச்சியும், வேதனையும் அளிப்பதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

இந்த குற்ற செயலில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், தடுக்கத் தவறிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளர்.

சமூகத்தை சீரழிக்கும் இத்தகைய குற்றங்கள் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்படும் என்றும் திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதனிடையே மாநில அமைச்சர்கள் திரு மா சுப்ரமணியன், திரு ஏ வ வேலு ஆகியோர் கள்ளக்குறிச்சிக்கு சென்று பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறினர்

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு ஏ வ வேலு, இது போன்ற குற்றங்களை தடுக்க தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - ஏ வ வேலு )  -51--- செகண்ட்*

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய உயிரிழப்புகள் அதிர்ச்சியும், வேதனையும் அளிப்பதாக தமிழக ஆளுநர் திரு ஆர். ஏன் ரவி கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திப்பதாக சமூக வலைதளப் பதிவில் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் கள்ளச்சாராயம் மற்றும் போதைப் பொருட்கள் புழக்கத்தைத் தடுக்க மாநில அரசு தவறி விட்டதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், திமுக ஆட்சி பொறுப்பேற்றது முதல் போதைப்பொருட்கள் புழக்கம் பல மடங்கு அதிகரித்துள்ளதாகவும், இதை பலமுறை சுட்டிக்காட்டியும் அரசு இதனை கண்டுகொள்ளவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

கள்ளகுறிச்சிப் பகுதியில் கள்ளச்சாராய விற்பனை நடநததாக புகார்கள் வந்த நிலையிலும் அரசு மெத்தனமாக செயல்படடதே தற்போதைய துயர சம்பவத்துக்குக் காரணம் என்று அவர் கூறியுள்ளார்.

இச்சம்பவத்துக்குக் காரணமானவர்கள் மீது மாநில அரசு கடும் நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டுமென்றும் திரு எல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழக சட்டப் பேரவைக் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.

இந்த கூட்டத்தொடரில் துறை வாரியான மானிய கோரிக்கைககள் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட உள்ளன.

விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி உறுப்பினர் புகழேந்தி மறைவுக்கும், முன்னாள் உறுப்பினர்கள் சிலரின் மறைவுக்கும் இரங்கல் தெரிவித்த பின் இன்றைய கூட்டம் ஒத்தி வைக்கப்படும்.

நாளை முதல் மானிய கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

வரும் 29-ம் தேதி வரை நடைபெறவுள்ள இந்த கூட்டத்தொடர் காலை, மாலை என இரு வேளையும் நடைபெறும் என பேரவைத் தலைவர் திரு அப்பாவு ஏற்கனவே அறிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

விவசாயிகளின் நலனில் திமுக அரசு அக்கறை செலுத்தவில்லை என அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், குறுவை தொகுப்பு திட்டத்திற்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்,

டெல்டா விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

குறுவை சாகுபடிக்கு மாநில அரசு முறையாக பயிர் காப்பீடு செய்யாததால் விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நீட் தேர்வில் தவறுகள் நடைபெற்றிருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்,.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய தேர்வுகள் முகமை இந்த தேர்வை நடத்தி வருவதாகவும், அதன் மீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும் கூறினார்.

தமிழக மாணவர்கள் நீட் தேர்வை சிறப்பாக எதிர்கொண்டு வருவதாகவும் திரு அண்ணாமலை தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ரஷ்யாவின் ரோஸ்டோவ் மாகாணத்தில் உள்ள எண்ணெய்க் கிடங்கை, யுக்ரைன் ட்ரோன் மூலம் தாக்கியதில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஈரானின் கஷ்மார் மாகாணத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 4 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

**[]<<<>>>[]**

சர்வதேச யோகா தினத்தையொட்டி நேபாளத்தின் பொக்காராவில் இந்திய தூதரகம் சார்பில் யோகா நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

60 நிலக்கரி சுரங்கங்களுக்கான 10-வது சுற்று ஏலத்தை மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி ஹைதராபாத்தில் நாளை தொடங்கி வைக்கிறார்.

**[]<<<>>>[]**

ஜம்மு காஷ்மீரின் பாராமுல்லா மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட துப்பாக்கி சண்டையில் இரண்டு தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**[]<<<>>>[]**

மதுரை மற்றும் தேனி மாவட்டங்களைச் சேர்ந்த அறிவியல் ஆசிரியர்களுக்கு தர நிலைகள் குறித்த இரண்டு நாள் பயிற்சி, இந்திய தர நிர்ணய அமைப்பின் சார்பில் மதுரையில் நடைபெற்றது.

[]<<<>>>[]

தென்காசி மாவட்டம் சுரண்டையில் பேருந்து நிலையம், பள்ளி கட்டிடங்கள் மற்றும் சார் பதிவாளர் அலுவலகத்தை ஆட்சியர் திரு கமல் கிஷோர் நேரில் ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத்தில், மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தலைமையில் வருவாய்த் தீர்வாயம் நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் 34 பயனாளிகளுக்கு 93 லட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி உமா வழங்கினார்.

[]<<<>>>[]

தமிழக அரசின் தாயுமானவர் திட்டம் குறித்து சென்னை மாநகராட்சி உறுப்பினர்கள் மற்றும் பிற துறை மாவட்ட நிலை அலுவலர்களுக்கான பயிற்சி, மாநகர மேயர் திருமதி பிரியா தலைமையில் நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா நான்கு ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுத் தொடரைக் கைப்பற்றியது.

பெங்களூருவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் மூன்று விக்கெட் இழப்புக்க 325 ரன் எடுத்தது.

326 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தென்னாப்பிரிக்கா ஆறு விக்கெட் இழப்புக்கு 321 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில், இரண்டு போட்டிகளில் இந்தியா வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியது.

மூன்றாவது மற்றும் இறுதி போட்டி வரும் 23-ஆம் தேதி நடைபெறுகிறது.

[]<<<>>>[]

உலகக் கோப்பை டுவெண்டி - டுவெண்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர் எட்டு சுற்றில் இந்தியா இன்று ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]